கிடைக்கத்தக்கது அல்ல என்று முடிவு கண்டு இந்த எழுவினாவிற்கு வாதிக்கு எதிராக விடையளிக்கப்படுகிறது.

**23) எழுவினா 6க்கான பரிசீலனையும் அதன் முடிவும்**

வாதியின் வழக்கை கவனமாக பரிசீலிக்கையில் வாதி தபசில் சொத்துக்கள் வாதி வகையறாவுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்து அதற்கு பின்னீடாக வாதியின் தனித்த அனுபவத்திற்கு எதிர்வாதியோ/வகையறாக்களோ/முகவர்களோ இடைஞ்சல் செய்யக்கூடாது என்று நிரந்தரஉறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்கும் படிக்கும்,கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று முடிவு கண்டுள்ள நிலையில், வாதிக்கு வேறு பரிகாரங்கள் எதுவும் கிடைக்கத்தக்கதில்லை என்று இந்த எழுவினாவிற்கு வாதிக்கு எதிராக விடையளிக்கப்படுகிறது.

**24) அ) இறுதியாக, இவ்வழக்கானது தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**ஆ) செலவு தொகை இல்லை என உத்தரவிடப்படுகிறது.**

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023-ம் வருடம் ஜூன் திங்கள் 23-ம் நாள் திறந்த வழக்கரங்கில் அவையறிய பகரப்பட்டது.

A V SUBASHINI
Digitally signed by A V SUBASHINI
Date: 2023.06.30 11:51:55 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**நாங்குநேரி**

**1) வாதி தரப்பு சாட்சிகள் பட்டியல்**

| வ.எண் | சாட்சிகளின் பெயர் | சாட்சிகளின் வரிசை |
|---|---|---|
| 1 | சுப்பிரமணியன் | வா.சா.1 |

**2) வாதி தரப்பு சான்றாவணங்கள் பட்டியல்**

| வ. எண். | தேதி | ஆவண விவரம் | சான்றாவண வரிசை | தன்மை |
|---|---|---|---|---|
| 1 | 12.08.2003 | களக்காடு சப் இன்ஸ்பெக்டரிடம் கொடுத்த புகார் | வா.சா.ஆ.1 | அசல் |